318

பாலியர் மித்திரன்

The Children's Friend

JANUARY, 1931

LITERATURE SOCIETY FOR INDIA
LAHABAD RANGOON COLOMBO

CH
0-7 30L
N81
181439

சென்னை கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார்

புதிதாய் அச்சிட்ட புத்தகங்கள்

முதற் புத்தகம்	By S. G. Daniel, B.A.	விலை,	2½	அணா.
இரண்டாம் புத்தகம்	do.	,,	3	,,
மூன்றாம் புத்தகம்	do.	,,	4	,,
நான்காம் புத்தகம்	do.	,,	4½	,,
ஐந்தாம் புத்தகம்	do.	,,	5	,,
பாலர் பாட அனுபந்தம்	do.	,,	3	,,

வித்தியா மாலிகை

பால பாடம்..	விலை,	1½	அணா.
முதற் புத்தகம்	,,	3	,,
இரண்டாம் புத்தகம்	,,	4	,,
மூன்றாம் புத்தகம்	,,	4½	,,
நான்காம் புத்தகம்	,,	5	,,
ஐந்தாம் புத்தகம்	,,	7	,,

C. L. S. தமிழ் வாசக புத்தகங்கள்

முதற் பாடம்	விலை,	1½	அணா.
முதலாம் வாசக புத்தகம்	,,	3	,,
இரண்டாம் வாசக புத்தகம்	,,	4	,,
மூன்றாம் வாசக புத்தகம்	,,	4	,,
நான்காம் வாசக புத்தகம்	,,	4½	,,
ஐந்தாம் வாசக புத்தகம்	,,	5	,,
ஆறாம் வாசக புத்தகம்	,,	5	,,

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

Post Box 501, Park Town, Madras

No. 1. ஜனவரி 1931

பாலியர் மித்திரன்

புது வருட வாழ்த்து.

"பாலியர் மித்திரனை" வாசிக்கும் நண்பர் யாவருக்கும் இவ்வருஷம் பாக்கியமான புது வருஷமாயிருக்க இயேசு இரட்சகரின் நாமத்தில் உள்ளக் கனிவோடு உவந்து வாழ்த்துகிறோம். "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாருதவராயிருக்கிறார்." அவர் நமது ஜீவியத்தின் கடந்த நாட்களில் நம்மைக் காத்து நடத்தி நமக்கு உதவிசெய்ததுபோலவே இந்த வருஷத்திலும் இனிவரும் நாட்களிலும் நமக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். இதற்கு அநுசரணையாக "இதோ சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" என்று சொல்லியும் இருக்கிறார். அவர் எக்காலத்திலும் நம்மோடி

ருப்பது எவ்வளவு ஆறுதலான காரியம். நமது இன்பத்திலும் துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் நம்மோடிருக்கிறார். வாழ்வில் நம்மைச் சந்தோஷப்படுத்தவும், தாழ்வில் நம்மைக் கைதூக்கியெடுக்கவும் நம்மோடிருக்கிறார். ஆகையால் நாம் பாவத்தில் நடந்தால், அவருக்கு விசனத்தை யுண்டுபண்ணுகிறோம். பரிசுத்தராய் நடந்தால், அவருக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறோம். பக்தருக்கு அவர் கொடுத்திருக்கும் பலத்த வாக்குத்தத்தம் "நாம் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்பது. மேலும் கடவுள் தம்மைப் பின்பற்றுகிற பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கும் சில வாக்குத்தத்தங்களை மாத்திரம் இங்கே நமக்கு எழுப்புதலாகக் கூறுவோம்:—

"கர்த்தருக்குப் பிரியமானவன் அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை அவர் எந்நாளும் காப்பாற்றுவார்."

"நன்மையைக்காணும்படி ஜீவனைவிரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன்

யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி நன்மைசெய். சமாதானத்தைத் தேடி அதைத் தொடர்ந்துகொள்."

"தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்."

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்."

இவைபோன்ற அநேக வாக்குத்தத்தங்களைக் கடவுள் தமது பிள்ளைகளுக்குக் கொடுத்திருப்பதால், ஒவ்வொருவரும் "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி, என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி. அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று கடவுளை நன்றியறிதலோடு துதித்து, அவர் காட்டும் உத்தம

வழியில் நடக்கத் தீர்மானித்து, இந்தப் புது வருஷத்தில் பிரவேசிப்போமானால், இது மெய்யாகவே பாக்கியமான புது வருஷமாயிருக்கும்.

வேத பாலியர் கதை.

1. முதல் ஆட்டிடையன் கதை.

இவ்வுலகம் உண்டான துவக்கத்திலே ஒரு இடைப்பையன் இருந்தான். அவன் பேர் ஆபேல்.

அவன் சகோதரன் பேர் காயீன். இவர்கள் இருவரும் நமது ஆதித்தாய் தந்தையராகிய ஆதாம் ஏவாள் பெற்ற முந்தின மக்கள்.

ஆபேல் ஆடுகளை மேய்க்கும் இடையனுகவும், காயீன் நிலத்தைப் பயிரிடும் சமுசாரியாகவும் ஜீவித்துவந்தார்கள். ஒருநாள் காயீன் தன் நிலத்தின் கனிகளில் சிலவற்றையும், ஆபேல் தன் மந்தையில் கொழுமையானவற்றையும் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தினுர்கள்.

ஆபேல் கடவுள்மேல் அன்பும் விசுவாசமும் உள்ளவனுய், தன்னைப் பாவியென்று உணர்ந்து, ஜெபத்தோடும் நன்றியோடும் தன் காணிக்கையைச் செலுத்தினுன். காயீனே கடமைக்காக அன்பும் நன்றியுமில்லாதவனுய்ச் செலுத்தினுன். (படம் பார்க்க). வெறுந்தோற்றத்தையும் வெளிவேஷத்தையும் பாராமல், இருதயத்தின் உள்ளான நோக்கத்தைப் பார்க்கும் கடவுள், ஆபேலின் காணிக்கையை அங்கீகரித்தார். காயீனின் காணிக்கையை அங்கீகரிக்கவில்லை. இதனுல் காயீன் தன் குற்றத்தை உணராமல், தன் சகோதரன்மேல் எரிச்சலாகி, கோபமூண்டு, ஆபேலைக் கொன்றுபோட்டான். இதுவே ஆதியில் நடந்த முதற்கொலை. காயீனே முதற் கொலைகாரன். ஆபேலே முதல் இரத்த சாட்சி. இந்தக் கொலையை அறிந்த கடவுள் காயீன் மேல் அதிக கோபமடைந்து, அவனைச் சபித்து,

அவ்விடத்திலிருந்து நீக்கிவிட்டார். இவ்விரண்டு சகோதரரில் ஆட்டிடையனாகிய ஆபேல் எவ்வளவு நல்லவனாய்க் கடவுளுக்கேற்ற பிரகாரம் நடந்து கொண்டான். ஆகையால் அவன் நீதிமானாகிய ஆபேல் என்றழைக்கப்பட்டான். வேஷபக்தி காட்டி, கடவுளிடம் அன்பும் நன்றியுமில்லாதவிதமாய் அவருடைய எச்சரிப்பை அசட்டைசெய்து, மனந்திரும்பாமல், எரிச்சலும் கோபமும் பழிவாங்குதலினாலும் ஏவப்பட்டு சகோதரனைக் கொன்ற காயீன் கொலைபாதகனானன். காயீன் காட்டிய வழி துன்மார்க்கத்தில் நடக்கும் பொல்லாத வழி. ஆபேல் என்ற சிறுவன் நடந்த வழி கடவுளுக்குப் பயந்து, கீழ்ப்படிந்து நடந்த சன்மார்க்க வழி. இதை நாம் பின்பற்றுவதே நலம். ஆகையால் சத்திய வேதத்திலே "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியைத் தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று புகழ்ச்சியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கடவுள் செய்வதெல்லாம் நன்றே.

ஒரு ஊரிலே ஒரு வியாபாரி இருந்தான். அவன் மிகுந்த தேவபக்தியுள்ளவன். கர்த்தர் செய்வதெல்லாம் நன்றே என்பது அவனுடைய கோட்பாடு.

ஒருநாள் வர்த்தகனும் அவன் மகனும் வெகு தூரத்திலிருந்த ஒரு கிராமத்துக்கு வியாபார விஷயமாய்ப் போனார்கள். போன இடத்தில் நல்ல வியாபாரம் நடந்தபடியால், அதிகப் பணம் சம்பாதித்தார்கள். தாங்கள் சம்பாதித்த பணத்தைப் பத்திரமாய்க் கட்டிவைத்துக்கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள். திரும்பிவருகையில் ஓயாத மழை பெரிய மழையாய்ப் பெய்தது. தகப்பனும் மகனும் வழிநெடுக பெருமழையில் அதிகமாய் நனைந்துவந்தார்கள்.

அப்போது மகன் தகப்பனைநோக்கி: கடவுள் செய்வதெல்லாம் நன்றே என்று எப்போதும் வற்புறுத்திச் சொல்வீர்களே, இப்போது நாம் சுகமாய்த் திரும்பிவரக்கூடாமல் இப்படி பெருமழையில் நனையப்பண்ணுகிறாரே, இது அவர் நமக்குச் செய்யும் நன்மையா என்றான். அதற்குத் தகப்பன் மகனைக் கண்டித்து: அப்படி ஒருபோதும் சொல்லாதே, கடவுள் செய்வதெல்லாம் நன்றே.

இந்த துன்பத்திலும் கடவுள் நமக்கு ஒரு நன்மையையே வைத்திருப்பார் என்முன். மகன் தகப்பனை எதிர்த்துப்பேச மனமற்றவனாய் மௌனமாயிருந்தான்.

அவர்கள் இருவரும் ஒரு காட்டுக்குச் சமீபமாய் வந்தபோது, மழை நின்றுபோயிற்று. அந்த காட்டைக் கடந்து, அவர்கள் தங்கள் ஊருக்குப் போகவேண்டும். அப்படி அவர்கள் காட்டின் நடுவே போகையில், ஒரு திருடன் அவர்கள் வருவதை அறிந்து, அவர்களைச் சுட்டுக்கொன்று, பணத்தை அபகரித்துக்கொள்ள ஆவலாய்க் காத்திருந்தான். அவர்களைக் கண்டதும், துபாக்கியினால் குறிபார்த்துச் சுட்டான். துபாக்கி வெடி எழும்பவில்லை. மறுபடியும் சுட்டான். அப்போதும் வெடி எழும்பவில்லை. இதனால் அவன் அதிக கோபத்தோடு தன்னைச் சபித்துக்கொண்டு திரும்பிப் போய்விட்டான்.

தகப்பன் மகனைநோக்கி: கடவுள் செய்வதெல்லாம் நன்றே என்று நான் ஓயாமல் சொல்வதின் உண்மையை இப்போது கண்டாயா என்முன். அதற்கு மகன்: மழை ஓயாமல் பெய்தது, காட்டுக்குள் நுழைந்தோம், திருடன்வந்து நம்மைச் சுட்டுக் கொல்லப்பார்த்தான், தப்பி ஓடிவந்தோம், இது தானா கடவுள் செய்த நன்மை என்முன். உடனே

தகப்பன்: நமக்கு உண்டான கஷ்டத்தைப் பார்க்க உனக்குக் கண் உண்டு, கடவுள் செய்த நன்மையைப் பார்க்க உனக்குக் கண் இல்லே. திருடன் நம்மைச் சுடாமற் போனதற்குக் காரணம் என்னவென்று தெரியுமா? ஓயாமற் பெய்த பெரு மழையிலே திருடன் வைத்திருந்த துபாக்கி மருந்து நனேந்துபோயிருந்தது. ஆகையால் அவன் நம்மைச் சுட்டுக் கொல்லக் கூடாமற்போயிற்று. இது கடவுள் செய்த நன்மை அல்லவா? இதற்காக அவருக்கு நன்றி செலுத்த வேண்டாமா என்முன்.

உன் பேர் என்ன?

கிரேக்கு தேசத்து கீர்த்திபெற்ற அரசனுன அலெக்சாந்தர் என்பவனுடைய பெரிய சேனையில் அலெக்சாந்தர் என்னும் பேர்கொண்ட ஒரு சேனுதிபதி இருந்தான்.

அவன் பயங்காளியும் கோழை நெஞ்சனும் தைரியமில்லாதவனுமா யிருந்ததை அரசன் அடிக்கடி கேட்டும் கண்டுமிருந்தான்.

ஒருநாள் அரசன் தனது சேனேக்குமுன் அவனே நிறுத்தி: உன்பேர் என்ன என்று கேட்டான். அதற்கு அந்த சேனுதிபதி: என் பேர் அலெக்சாந்தர் என்முன்.

மறுபடியும் அரசன் அவனைப் பார்த்து: உன் பேர் என்ன என்று அதிகமாய் வற்புறுத்திக் கேட்டான். என் பேர் அலெக்சாந்தர் என்று சேனாதிபதி சொன்னான்.

அப்போது அரசன் அவனை நோக்கி: உன் அரசன் பேர் அலெக்சாந்தர். உன் அரசனுடைய வீரம், தைரியம், அஞ்சாமை முதலிய குணங்கள் உன்னிடத்தில் காணப்படவில்லை. ஆகையால் நீ ஒன்றில் தைரியமுள்ள வீரனாகவேண்டும், இல்லாவிடில் அலெக்சாந்தர் அரசனின் சேனையை விட்டு அப்பாலே போகவேண்டும், என்ன சொல்லுகிறாய் என்றான்.

அதற்கு அந்த சேனாதிபதி: நான் தளராத தைரியமும் அஞ்சாத ஆண்மையுமுள்ள வீரனாய் மாறப் பிரயாசப்படுவேன் என்றான்.

அரசன் உடனே அவனைத் தன் சேனையிலிருந்த பெருத்த வீரருடைய வகுப்பில் சேர்த்துவிட்டான். அந்தப் பெருத்த வீரர், போர்முகத்தில் நிற்பதிலும், சேனையை நடத்துவதிலும், சத்துருவை எதிர்ப்பதிலும் சலியாமல் வேலைசெய்த வீராயிருந்ததைக் கண்ட அலெக்சாந்தர் சேனாதிபதியும் அவர்களோடு ஓடி ஆடி ஓயாமல் உழைத்ததினால், அவர்களைப் போலவே பெருத்த வீரரில் ஒருவ

ஞான். இதை அரசன் கண்டு அதிக சந்தோஷப் பட்டான்.

கிறிஸ்தவர்கள் என்று பேர்வைத்திருக்கிற நாம் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்று கிறோமா? அவரில் காணப்பட்ட அன்பு, பொறுமை, நீடிய சாந்தம், தாழ்மை, தயவுமுதலிய தேவ குணங்கள் நம்மிடத்தில் காணப்படுகிறதா? இல்லா விட்டால் நாம் கிறிஸ்தவர்கள் என்று பேர் தரித் திருப்பதில் பிரயோஜனமில்லை. நாம் வேதவச னத்தை ஆராய்ந்து, கடவுளுடைய சித்தத்தை அறிந்து, ஜெபத்திலே தரித்து, பக்தரோடு உறவாடி, பரிசுத்தத்தில் நடக்கப் பிரயாசப்படவேண்டும். நம்மை எதிர்த்து நிற்கும் ஞானசத்துருக்களை ஜெயிக்க ஞான ஆயுதங்களை இரவும் பகலும் ஓயா மல் உபயோகிக்கவேண்டும்.

"தேவரீருடைய தயையை
பட்சம், நீதி, சற்குணம்,
பரிசுத்தம், சத்தியம்,
மா இரக்கம், பொறுமையை
என் இருதயத்திலே
நட்டு வையும், இயேசுவே".

என்று நாம் ஒவ்வொருவரும் உருக்கமாய் ஜெபிக்க வேண்டும்.

ஒரு குடித்தனக்காரியின் சாமர்த்தியம்.

ஒரு ஊரிலே ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் தினந்தோறும் பண்டாரங்களுக்குச் சாப்பாடு போடுவது வழக்கம். இதனால் அவன் மனைவிக்கு ஓயாத வேலையாயிருந்தது. பண்டாரங்களுக்கு ஆக்குவதும் அரிப்பதுமே அவளுக்குக் கஷ்டமான வேலையாயிருந்தது. இதை எப்படியாகிலும் ஒழித்துவிடும்படி ஒரு உபாயம் தேடிக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் வர்த்தகன் கடையில் உட்கார்ந்திருக்கையில், ஒரு பண்டாரம் அவ்வழியே போனதைக் கண்டு, கடையை விட்டிறங்கி, ஓடிவந்து, வணங்கி: நீர் என் வீட்டுக்கு ஒருநாளும் வந்ததில்லையே, இன்றைக்குக் கட்டாயமாய் என் வீட்டுக்கு வந்து போஜனம்பண்ணிப் போகவேண்டும்; என் வீட்டுக்குப் போய், நான் உம்மை அனுப்பினதாக என் மனைவியிடம் சொல்லி, திண்ணையில் உட்கார்ந்திரும்; கொஞ்சநேரத்துக்கெல்லாம் நான் வீட்டுக்கு வந்துவிடுவேன் என்றான்.

இதைக் கேட்ட பண்டாரம் அதிக சந்தோஷமடைந்து, வர்த்தகன் வீட்டுக்குப் போய், அவன் மனைவியினிடம் வர்த்தகன் சொன்னதைச் சொன்னான். அவளும் முகமலர்ந்து, தெருத்திண்ணையில்

பாயை விரித்து, உட்காரச்சொல்லி உபசரித்தாள். பண்டாரம் தெருத்திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, வர்த்தகன் வரவை எதிர்நோக்கியிருந்தான்.

அப்போது வீட்டுக்காரி வீட்டுவாசலை நன்றுய்ப் பெருக்கிச் சுத்தம்பண்ணி, அரிசி குத்தும் உலக்கையை எடுத்துத் துடைத்து, சாம்பல் பூசி, வாசலின் நடுவே நிறுத்தி, மூன்றுமுறை அதைச் சுற்றி வந்து, மந்திரம் சொல்வதுபோல் ஏதோ ஒன்றை முணுமுணுத்து, அதன்முன் முகங்குப்புற விழுந்து வணங்கி, வெகு பக்திவிநயத்துடன் அப்புறம் எடுத்துவைத்தாள்.

இதெல்லாவற்றையும் வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த பண்டாரம் வீட்டுக்காரியை நோக்கி: இதென்ன அம்மா, புதுமாதிரி பூசையாய் இருக்கிறதே என்றுன்.

அதற்கு அவள்: ஐயா, நான் இப்போது செய்தது உலக்கைப் பூசை. இந்தப் பூசை எங்கள் குலதெய்வத்தின் விசேஷித்த பூசை என்று சொல்லி, இது சீக்கிரத்தில் உன் தலையில்தான் வந்து விழப்போகிறதென்று பண்டாரத்தின் காதில் விழும்படி சொல்லிக்கொண்டே போய்விட்டாள்.

பண்டாரம் உலக்கையைத் தன் தலையில் தாக்கி, புருஷனும் பெண்சாதியும் கொல்லப்போகிருர்க

ளென்று பயந்து, ஒருவருக்கும் தெரியாமல் ஒரே ஓட்டமாய் ஓடி, ஒரு சந்துமுனையிலே ஒளித்துக் கொண்டிருந்தான்.

சற்றுநேரம்சென்று வர்த்தகன் வீட்டுக்கு வந்து, பண்டாரத்தைக் காணமல், மனையாளை நோக்கி: நான் ஒரு பண்டாரத்தை அனுப்பினேனே. அவர் எங்கே என்று விசாரித்தான். அதற்கு அவள்: நீங்கள் இருந்திருந்தும் நல்ல பண்டாரத்தை இம்முறை அனுப்பினீர்கள்; அவர் வந்ததும் தெருத்திண்ணையில் பாயை விரித்து, உட்காரும்படி உபசரித்தேன். அவரோ மூலையில் சாத்திவைத்திருந்த நமது வீட்டு உலக்கையைத் தரும்படிக்கேட்டார். நான்: நல்லது, அப்படியே ஆகட்டும். எஜமான் வந்ததும் கேட்டு, அவர் இஷ்டத்தை அறிந்து கொடுக்கிறேன் என்றேன். இதற்குள்ளாக அவர் கோபித்துக்கொண்டு, போய்விட்டார், நான் என்ன செய்வேன் என்றாள்.

வர்த்தகன்: அடி, என்ன காரியம் செய்தாய். பண்டாரங்கள் எதைக் கேட்டாலும் நீ கொடுப்பது எனக்கு இஷ்டந்தானே என்று சொல்லி, உலக்கையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு பண்டாரம் போனவழியே அவனைத் தேடிப் போனான்.

சந்துமூலையில் மறைந்திருந்த பண்டாரம், வர்த்தகன் உலக்கையோடு விரைவாய் வருவதைக் கண்டு, உலக்கையினால் தன்னை அடிக்க வருகிறான் என்று

முன்னிலும் அதிகமாய்ப் பயந்து ஓட ஆரம்பித்தான்.

பண்டாரத்தைக் கண்ட வர்த்தகன்: ஓய், பண்டாரம், நில்லும், நில்லும், உலக்கை இந்தாரும் என்று கூவிக்கொண்டு ஓடினான். வர்த்தகன் தொந்தி பெருத்தவனானபடியால், அதிகமாய் ஓடக் கூடாமல், வேர்த்து விருவிருத்து, உலக்கையைக் கையில் பிடித்தவண்ணம் வீடுவந்து சேர்ந்தான்.

பண்டாரமோ: உயிர் தப்பிப் பிழைத்தேன், பிழைத்தேன் என்று மடத்துக்கு ஓடிவந்து, அங்கிருந்த தன் கூட்டாளிகளை நோக்கி: வர்த்தகன் வீட்டில் நடந்ததையெல்லாம் விவரமாய்ச் சொன்னான். அன்றுமுதல் எந்தப் பண்டாரமும் வர்த்தகன் வீட்டுக்கு வந்ததேயில்லை. வீட்டுக்காரியும் தன் உபாயம் பலித்ததைக் கண்டு அதிக சந்தோஷமடைந்தாள். புத்திமான் பலவானாவான்.

14-ம் வேத ஆராய்ச்சி வினாக்கள்.

உலக சிருஷ்டிப்பு.

1. தேவன் ஆதியிலே எதைச் சிருஷ்டித்தார்?
2. எத்தனை நாளில் சிருஷ்டித்தார்?

3. பூமி என்னமாயிருந்தது?
4. ஒவ்வொருநாளிலும் சிருஷ்டித்ததை வரிசையாய்ச் சொல்லு.
5. வெளிச்சத்துக்கும் இருளுக்கும் என்ன பேரிட்டார்?
6. ஆகாய விரிவுக்கு என்ன பேரிட்டார்?
7. பகலை ஆளும் பெரிய சுடருக்கும் இரவை ஆளும் சிறிய சுடருக்கும் பேரென்ன?
8. இந்த சுடர்கள் எதைக்குறிக்கும் அடையாளங்கள்?
9. தேவன் மனுஷனை எந்த சாயலாக சிருஷ்டித்தார்?
10. அவன் எதை ஆளக்கடவன் என்றார்?
11. அவனுக்கு ஆகாரமாக எதைக் கொடுத்தார்?
12. தேவன் சிருஷ்டித்த யாவும் எப்படி இருந்தது?

DIOCESAN PRESS, MADRAS, 1930—B 652

VILLAGE SERIES

TAMIL

	A	P
No. 1. Jesus Opens the Eyes of the Blind Beggar. இயேசு பிச்சைக்காரக் குருடனின் கண்ணைத் திறந்தது. (பக்கம் 8)	0	1
No. 2. 'Who are Blessed.' பாக்கியவான்கள் யார்? (பக்கம் 6) .... No. 3. The Bravery of Sogoro. சோகோரோவின் தைரியம். (பக்கம் 6)	0	1
No. 4. What Do You Buy in the Drink Shop? சாராயக்கடையில் எதை வாங்கலாம்? (பக்கம் 16)	0	1
No. 5. Some Ancient Good Sayings. பழைய காலத்து நல்மொழிகள். (பக்கம் 16)	0	1
No. 6. The Excellent Offerings of Three Poor Women. மூன்று ஏழை ஸ்திரீகள் கொடுத்த உத்தம காணிக்கை. (பக்கம் 16)	0	1
No. 7. Father Damien the Lepers' Friend. தாமியன் சுவாமியார் குஷ்டரோகிகளின் நேசன். (பக்கம் 16)	0	1
No. 8. The Teaching of Jesus about The Growing Grain. வளரும் பயிர்—இதைப் பற்றிய இயேசுவின் போதனை. (பக்கம் 20) ..	0	2
No. 9. The Story of Christopher. கிறீஸ்தோபேரின் சரித்திரம். (பக்கம் 16)	0	1
No. 10. Sore Eyes. கண்ணோய். (பக்கம் 12).	0	1
No. 11. The Mosquito—our Enemy. கொசு என்னும் நமது சத்துரு. (பக்கம் 20)..	0	2

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Post Box 501, Park Town, Madras

பாலியர் மித்திரன்

THE CHILDREN'S FRIEND

(Formerly called The Mission School Magazine)

THE **Paliar Mittiran** is a bright Magazine for children containing stories, anecdotes, nature studies and object-lessons, and pages in large type for those in the lowest classes edited by Rev. V. Vedanayagam, Madras. The subscription (exclusive of postage) is *one anna* for one copy a month for twelve months.

பாலியர் மித்திரன். சிறுவர்க்கேற்ற இப்பத்திரிகையில் சரித்திரங்களும், வினோதமான பொருட்பாடங்களும், படிக்க ஆரம்பிக்கிறவர்களுக்குப் பெரிய அட்சரங்களில் சில கதைகளும் அடங்கியிருக்கிறதினாலே பிள்ளைகள் இதை ஆவலாய் வாசிப்பார்கள். இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 1.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற் கூலி மிகவும் குறையும்.

மாதர் போதினி

THE MAGAZINE FOR THE HOME

THE **Mathar Bodhini** provides pure and attractive reading for the family circle. Teachers in Girls' Schools, Bible-women and Zenana workers will find it specially helpful.

மாதர் போதினி என்னும் பத்திரிகையில் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும், சுகவழியைப்பற்றிய போதனைகளும், மதுபானத்திற்கு விரோதமான எச்சரிக்கைகளும், பல கதைகளும், உபமானங்களும் அடங்கியிருப்பதினால் குடும்பத்தில் யாவரும் இதை விருப்பத்தோடு வாசிப்பார்கள். பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கல்வி கற்றுக்கொடுக்கும் வேதாகம ஸ்திரீகளுக்கும் உபாத்திச்சிமார்களுக்கும் இது விசேஷமாய் உபயோகமுள்ளது. இதின் விலை:

வருஷம் பிரதி ஒன்றுக்கு தபாற்கூலி இல்லாமல் கையொப்பம் அணா 6.

ஒரே மேல்விலாசத்திற்கு அநேக பிரதிகள் அனுப்பப்படும் பக்ஷத்தில், தபாற் கூலி மிகவும் குறையும்.

கடிதங்கள், கையொப்பப்பணம் அனுப்புவோர் அவைகளை அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

CHRISTIAN LITERATURE SOCIETY, POST BOX 501, MADRAS